**இலங்கை தொழிற் பயிற்சி அதிகாரசபை - 2022**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இலங்கை தொழிற் பயிற்சி அதிகாரசபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தினதும், 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அதிகாரசபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகாரசபை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதிகாரசபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கல்லூரிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான

நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகாரசபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- அதிகாரசபை ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை ''திட்டமிட்டு பேணுதல்'' நிறுவகத்திற்கு அவசியமாக உள்ளது. அதன் பிரகாரம் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கணக்கீட்டு முறைமை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது 2022 ஆம் ஆண்டின் போது முறைமையில் உள்ளடக்கப்பட்டிருந்த தரவுகள் 2023 சனவரி முதல் ஏப்ரல் வரையான காலப் பகுதியில் நாட்குறிப்பு பதிவுகளை ஈடுபடுத்தாமல் கூட்டுமொத்தமாக ரூபா 1,155,529 ஆன 144 பற்றுச்சீட்டுக்கள் மற்றும் ரூபா 1,027,250 கூட்டுத்தொகையான 96 விற்பனைப் பட்டியல்கள் அழிக்கப்பட்டமை (delete) மற்றும் திருத்தம் செய்யப்பட்டிருந்தமை வெளிப்படுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே கணக்கீட்டு முறைமையில் தரவுகளை உள்ளடக்குகின்ற உத்தியோகத்தர் எந்தவொரு கட்டுப்பாடுமின்றி தரவுகளை மாற்றுவதற்கும் அதிகார பலமும் வழங்கப்பட்டிருந்தது. | கணக்காய்வில் குறிப்பிடப்பட்டிருக்கின்ற முறையில் கணக்கீட்டு முறைமையில் சரிசெய்வதற்கு ஏற்படுகின்ற பிழைகளை சரிசெய்தலை வரையறுப்பதற்கும் மற்றும் அதற்காக வெளிப்படையாக இருக்க வேண்டிய முறையான திட்ட முறைமையொன்றைத் தயாரித்து அமுல்படுத்துவதற்கும் அதற்காக கணனிமயப்படுத்தப்பட்ட கணக்கீட்டு மென்பொருளில் உள்ள வசதிகள் தொடர்பாக கண்டறிந்து அவற்றையும் அமுல்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கீட்டு முறைமையில் தொடர்ச்சியாக பரிசோதனைக்கு உட்படுத்தக் கூடிய வகையில் முறையான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை ஏற்படுத்த வேண்டியிருந்ததுடன் கணக்கீட்டு முறைமையில் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகளுக்காக வரையறைகள் ஏற்படுத்துதல் வேண்டும். |

### 1.5.2 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 7 இன் 14 ஆம் பிரிவின் பிரகாரம் அதிகாரசபையால் அவர்களுக்கு உரித்தின்றிய 20 காணிகளில் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடங்களின் பெறுமதி மற்றும் அதிகாரசபைக்கு உரித்தான 08 காணிகளும், அந்தக் காணிகளில் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடங்களின் பெறுமதிகளும் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 29 காணிக் கூறுகளில் 7 கூறுகள் இன்னும் மதிப்பீடு செய்யப்படாதிருந்தமையால் மதிப்பீடு செய்யப்பட்ட 22 காணிக் கூறுகளின் பெறுமதி 2022 ஆம் ஆண்டின் கணக்குகளில் உள்ளடக்கப்படவில்லை. | நிறுவனத்திற்குச் சொந்தமான சகல சொத்துக்களும் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2022 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட மீள்மதிப்பீட்டின் போது இனங்காணப்பட்ட மீள்மதிப்பீட்டு மிகை கணக்கு வைக்கும் போது 2018 ஆம் ஆண்டின் போது மேற் கொள்ளப்பட்ட சொத்துக்கள் மீள்மதிப்பீட்டின் போது இனங்காணப்பட்ட ரூபா 51,409,653 | இந்த மீள்மதிப்பீட்டு மிகை 2023 ஆம் ஆண்டின் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் சரியான மீள்மதிப்பீட்டு மிகை அல்லது பற்றாக்குறை |

| | | | |
|---|---|---|---|
| | ஆன மீள்மதிப்பீட்டு நட்டம் தொடர்பாக இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 7 இன் 52 ஆம் பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரண்ட மிகை மற்றும் மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் என்பன அப்பெறுமதியால் முறையே குறைத்தும், அதிகரித்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | | தயாரிக்கப்படல் வேண்டும். |
| (இ) | 2019 ஆம் ஆண்டின் போது நிதிக் குத்தகையின் அடிப்படையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட 03 மோட்டார் வாகனங்களுக்குரிய நிதிக் குத்தகை பொறுப்புக்கள் மற்றும் வட்டிச் செலவினம் கணக்கு வைக்கும் போது இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 12 இல் காண்பிக்கப்பட்டுள்ள பிரகாரம் மறைமுக (implicit) வட்டி விகிதம் அடிப்படையாகக் கொள்ளாமையின் காரணமாக 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நடைமுறை அல்லா மற்றும் நடைமுறை குத்தகை பொறுப்புக்கள் முறையே ரூபா 1,177,479 மற்றும் ரூபா 1,119,992 குறைத்து காண்பிக்கப்பட்டிருந்ததுடன் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரண்ட மிகை ரூபா 2,297,471 அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2022 இன் நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட பிரகாரம் 2023 ஆம் ஆண்டின் போது உரிய சீராக்கங்களை மேற்கொண்டு இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 12 இன் பிரகாரம் கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 நவம்பர் 30 ஆம் திகதி நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்டு அதிகார சபைக்கு கையளிக்கப்பட்ட கிரயம் ரூபா 7,743,902 ஆன மாத்தறை மாவட்டத்தில் றுகுணுகம தொழிற் பயிற்சி நிலையக் கட்டிடம் மூலதனமாக்கப்படாமையின் காரணமாக கட்டிடங்களின் பெறுமதி அந்தப் பெறுமதி மற்றும் நிறுத்திவைத்தல் பணம் கணக்கின் மீதி என்பன ரூபா 398,158 குறைவாகவும் நடைமுறை வேலைக் கணக்கின் மீதி ரூபா 7,345,744 அதிகரித்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | இறுதிப் பட்டியல் செலுத்தாதிருந்தமையால் 2022 ஆம் ஆண்டின் போது நடைமுறை வேலையின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதும் 2023 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது கட்டிடத்தின் கிரயத்தை மூலதனமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்டு அதிகார சபைக்கு கையளிக்கப்பட்ட கட்டிடங்களை மூலதனமாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது கட்டிடங்கள் மற்றும் மோட்டார் வாகன சொத்துக்கள் வகுப்பிற்காக பெறுமானத் தேய்வு | தற்போது சொத்துக்கள் வகுப்பு இனங் காணப்பட்டுள்ளமையால் | சரியான பெறுமானத் தேய்வு பெறுமதி |

| | | | |
|---|---|---|---|
| | கணிப்பீடு செய்யும் போது 2018 ஆம் ஆண்டில் இருந்து 2021 ஆம் ஆண்டு வரையான காலத்தில் கைப்பற்றப்பட்ட சொத்துக்களுக்கு மீளாய்வாண்டின் போது பெறுமானத் தேய்வு கணிப்பிடும் போது இரண்டைக் கணிப்பீடு செய்யப்பட்டதன் காரணமாக ஆண்டின் பெறுமானத் தேய்வு செலவினம் ரூபா 134,630,322 அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக மீளாய்வாண்டின் மிகை மற்றும் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமானத் தேய்வு அப் பெறுமதியால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டின் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணிப்பிடப்பட்டு நிதிக் கூற்றுக்களில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்கு கணக்காய்வு பரிசோதனையின் போது 2022/2023 கல்வி ஆண்டிற்காக ஆரம்பிக்கப்பட்ட 09 பகுதிநேரப் பாடநெறிகளில் 2023 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 3,054,300 ஆன செலவினம் 2022 ஆம் ஆண்டின் செலவினமாக கணக்கு வைக்கப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டின் பற்றாக்குறை மற்றும் அட்டுறு செலவினம் என்பன அப்பெறுமானத்தால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | பகுதிநேரப் பாடநெறிகள் ஆரம்பிக்கப்படுகின்ற ஆண்டை அடிப்படையாகக் கொண்டு வருமான செலவினம் சீராக்கப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் அந்த பாடநெறிகளின் ஆண்டிற்குரிய காலத்தை அடிப்படையாகக் கொண்டு வருமான செலவினத்தை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஆண்டின் பற்றாக்குறை/ மிகை கணிப்பீடு செய்யும் போது ஆண்டிற்குரிய வருமானம் மாத்திரம் சரியாக இனங்காண்டு சீராக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | அதிகாரசபையின் பரீட்சை மற்றும் மதிப்பீட்டு பிரிவு மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் சான்றிதழ் விநியோகிக்கும் பிரிவிலிருந்தும் கிடைத்த தகவல்களின் பிரகாரம் NVQ சான்றிதழ் பத்திரம் விநியோகிப்பதற்காக அதிகார சபையினால் மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவிற்கு 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய ரூபா 8,156,600 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | தற்போது இந்த கொடுப்பனவுகளுக்காக நிதி ஏற்பாடு இல்லாமையினால் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படுகின்ற இணக்கப்பாட்டின் அடிப்படையில் 2023 ஆம் ஆண்டின் நிதி ஏற்பாடுகளில் இந்த கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக் கூற்றுக்களின் மூலம் உள்ளபடியான மற்றும் நியாயமான நிலைமையை பின்பற்றி ஆண்டிற்குரிய சகல கொடுக்கல் வாங்கல்களும் கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | விஷேட செயற்திட்டத்தை நிறைவேற்றுவதற்காக தொழிற் பயிற்சி அதிகார சபைக்கு பல்வேறு நிறுவனங்களினால் 2022 ஆம் ஆண்டின் போதும், அதற்கு முன்னைய ஆண்டுகளின் போதும் வழங்கப்பட்ட கூட்டுமொத்தமான ரூபா 45,326,885 தொகை வைப்புக் கணக்கில் செலவு வைப்பதற்குப் பதிலாக செலுத்த வேண்டிய செலவினக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது. | செயற்திட்டங்களிலிருந்து கிடைத்த எதிர்வரும் ஆண்டுகளின் போது செலவினங்களைச் செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட பணம் இந்த கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் இந்தப் பணம் 2023 ஆம் ஆண்டின் போது செலவினங்கள் மேற்கொள்ளப்படும். | விஷேட செயற்திட்டங்களை நிறைவேற்றுவதற்காக கிடைக்கின்ற பணம் உரிய ஆண்டின் போது பயன்படுத்துவதற்கோ அல்லது சேமிப்பு பணத்தை திறைசேரிக்கு அனுப்புவதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.5.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| | விடயம் | தொகை<br>ரூபா | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வுச் சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | விசேட செயற்திட்ட மானியம் | 13,266,934 | செயற்திட்டம் தொடர்பான விபரங்கள் மற்றும் ஒவ்வொரு செயற் திட்டத்திற்காகவும் ஒதுக்கப்பட்ட நிதியின் அளவு மற்றும் நிதி விடுவித்தல் தொடர்பான கடிதம் | விசேட செயற்திட்ட நிதி ஏற்பாட்டை பெறுவதற்குரிய எழுத்து மூல சான்றுகள் உங்களுக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கீடு செய்யப்பட்ட விசேட செயற்திட்ட பெறுவனவுகளின் சரியான தன்மையை உறுதிப்படுத்துவதற்குரிய சான்றுகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | மாற்றல்கள் அல்லாத கொடுப்பனவுகளில் உருவான மூலதன மானிய வருமானம். | 18,632,491 | -மேற்படி- | நிதி ஏற்பாடு கிடைப்பதற்குரிய எழுத்துமூல சான்றுகள் உங்களுக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கீடு செய்யப்பட்ட மாற்றல்கள் அல்லாத கொடுக்கல் வாங்கல்களில் இருந்து உருவான மூலதன மானியம் வருமானங்களில் சரியான தன்மையை உறுதிப்படுத்துவதற்காக உரிய சான்றுகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டிய பணம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபையின் 2003 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியின் போது சேவையிலிருந்து விலகிச் சென்ற 35 உத்தியோகத்தர் களிடமிருந்து அதிகார சபைக்கு அறவிட வேண்டிய ரூபா 20,246,792 தொகை 2023 யூலை 26 ஆம் திகதி வரையிலும் அறவிடுவதற்கு தவறியிருந்தது. | இந்த உத்தியோகத்தர்கள் தொடர்பாக சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்காக சட்டமா அதிபருக்கு அனுப்பப்பட்டுள்ளது. | சேவையிலிருந்து விலகிச் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய சகல பணத்தையும் அறவிடுவதற்காக முறையான வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதிகார சபைக்கு அரசாங்கத்தின் 03 நிறுவனங்களிலிருந்து கிடைக்க வேண்டிய கூட்டுமொத்தமான ரூபா 5,512,969 ஆன மீதி 10 வருடங்கள் கடந்திருந்த போதிலும் 2023 மே 31 ஆம் திகதி வரையிலும் அறவிடுவதற்கு முடியாதிருந்தது. | நிதி, பொருளாதார, ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசியக் கொள்கை அமைச்சின் மூலம் விநியோகிக்கப்பட்ட 2023.05.16 ஆம் திகதிய PED/01/2021(i) ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவிற்குச் சமர்ப்பித்து அதன் பரிந்துரையின் அடிப்படையில் பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்படும். | நீண்ட காலம் நிலுவையாக உள்ள மீதியை தாமதமின்றி அறவிடுவதற்கும் போதியளவான அறவிட முடியாக் கடன் ஒதுக்குவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | காணிகளின் விடுவிப்பு தன்மை தொடர்பாக கவனத்திற் கொள்ளாமல் நுவரெலியா வன ராஜவத்த கிராமிய தொழிற் பயிற்சி நிலையம் அமைந்துள்ள காணியில் 03 றூட் 31.3 பேர்ச் அதிகார சபைக்கு கையேற்பதற்காக காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்கு 2018 ஏப்ரல் 25 ஆம் திகதி செலுத்தப்பட்ட ரூபா 9,280,000 தொகை செலுத்தப்பட்டிருந்த போதும் 05 வருடங்கள் கடந்த பின்னரும் காணியின் உரித்து அதிகார சபைக்கு கையேற்பதற்கோ அல்லது செலுத்தப்பட்ட பணத்தை அறவிடுவதற்கோ முடியாதிருந்தது. | வன ராஜவத்த காணிக்காக தற்போது வழக்கு நடவடிக்கைகள் காணப்படுகின்றமையால் அது தீர்க்கப்பட்டதன் பின்னர் இந்த பணத்தை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | காணியின் தீர்த்தல் வைத்தல் உரித்து தொடர்பாக கவனம் செலுத்தி காணியைக் கைப்பெற்றுவதற்காக பணம் செலுத்துதல் வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய இலக்கம் 1/2020 என்ற அரச நிதி சுற்றறிக்கையின் 9 ஆம் பந்தியின் மூலம் திருத்தப்பட்ட நிதிப் பிரமாணம் 371(2)(ஆ) | ஏதாவது விஷேட பணி ஒன்றுக்காக ஒரு சந்தர்ப்பத்தின் போது ரூபா 100,000 ஆகக் கூடிய அளவு வரை மாத்திரம் உப கட்டுநிதி வழங்க முடியுமாக இருந்த போதும் அதற்கு முரணாக 12 சந்தர்ப்பங்களின் போது ரூபா 100,500 முதல் ரூபா 340,404 வீச்சில் கூட்டுமொத்தமாக ரூபா 1,788,693 உப கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் உச்ச எல்லையில் செயல் நிமித்த உப கட்டுநிதி வழங்க வேண்டும் என நிதிப் பிரிவிற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணம் மற்றும் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2021 நவம்பர் 26 ஆம் திகதிய இலக்கம் 221/03 என்ற அரச கணக்குகள் திணைக்கள வழிகாட்டியின் 8.1 மற்றும் 8.2 ஆம் பந்திகள் | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதி நிலைமைக் கூற்றில் காண்பிக்கப்பட்ட ரூபா 7,659,583,443 ஆன ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் சரியான தன்மையை உறுதிப்படுத்துவதற்கு தேவையான முறையான நிலையான சொத்துப் பதிவேடு பேணிச் செல்லப்பட்டிருக்க வில்லை. | முறையான பிரகாரம் நிலையான சொத்துப் பதிவேடொன்றை தயாரிக்கும் நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப் படுகின்றது. | ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் சரியான தன்மையை உறுதிப்படுத்துவதற்கு முறையான நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணிச் செல்லப் படல் வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 544,059,934 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 327,145,399 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 216,914,535 மேலும் வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு திறைசேரி மூலதன மானியம் குறைவடைந்தமை, பதவியணியினர் மற்றும் ஏனைய செயற்பாட்டுச் செலவினங்கள் அதிகரித்தமை என்பன பிரதான காரணமாக இருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| துறைசார் ரீதியான அபிவிருத்தி செயற்திட்டத்தின் (SSDP) நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் 03 | SSDP செயற்திட்டத்தினால் ஒவ்வொரு ஆண்டின் போதும் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டு | செலவிடப்பட்ட செலவினத்திற்கு நிகரான நலன் |

| | | |
|---|---|---|
| தொழிற் பயிற்சி நிலையங்களை நவீனமயப்படுத்தும் நடவடிக்கைகளுக்காக 2014 ஆம் அண்டின் போது ஆலோசனைக் கம்பனிக்கு ரூபா 1,212,570 செலுத்தப்பட்டிருந்த போதும் அந்த நவீன மயப்படுத்தும் நடவடிக்கைகள் 2023 யூலை 31 ஆந் திகதி வரையிலும் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக செலவிடப்பட்ட செலவினம் சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்களாக இருந்தது. | வரையறுக்கப்பட்டிருந்தமையால் அந்த 03 நிலையங்களின் நிர்மாண நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு முடியாதிருந்தது. எனினும் வழங்கப்பட்ட திட்டம் மற்றும் மதிப்பீடு (அளவிடைப் பத்திரம்) எதிர்காலத்தில் பயன்படுத்திக் கொள்வதற்காக எங்களிடம் உள்ளது. மேலும் இது தொடர்பாக பணிப்பாளர் சபையின் ஆலோசனை பெறப்பட்டுள்ளதுடன் அது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவிற்கு சமர்ப்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்கு முடியுமான வகையில் செயற்பாடுகள் திட்டமிடப்படல் வேண்டும். |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | 2018 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதிக்குரிய அதிகார சபையின் கொழும்பு மாவட்ட அலுவலகத்திற்குரிய 11 பயிற்சி நிலையங்களில் நடாத்தப்பட்ட 13 பாடநெறிகளுக்காக சேர்க்கப்பட்ட பயிலுநர்கள் மற்றும் இலக்கிடப்பட்ட எண்ணிக்கையுடன் ஒப்பிடும் போது சேர்க்கப்பட்ட வீதம் 10 சதவீதம் முதல் 66 சதவீதம் வரையிலான குறைவான மட்டத்தில் காணப்பட்டது. அவ்வாறே அந்தப் பாடநெறிகளை விட்டுச் செல்லும் வீதம் 20 சதவீதம் முதல் 58 சதவீதம் வரையிலான வீச்சினைக் கொண்டிருந்ததுடன் அந்தப் பாடநெறிகளை விட்டுச் செல்வதற்கான காரணங்களை கண்டறிந்து அவற்றுக்குத் தேவையான தீர்வினை வழங்குவதற்கு முகாமைத்வதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பல்வேறு சந்தர்ப்பங்களில் பாடநெறிகளில் காணப்பட்ட காரணங்களின் அடிப்படையிலும் மற்றும் இணைக்கப்பட்ட பயிற்சி நிலையங்களில் காணப்படுகின்ற பல்வேறு நிருவாக பிரச்சினைகளின் அடிப்படையிலும் 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் காணப்பட்ட கொரோனா தொற்று நோய் நிலைமையின் காரணமாகவும் பாடநெறிகளைத் தொடர்ச்சியாக அமுல்படுத்துவதற்கு வசதியீனமாக இருந்தது. | பயிற்சி நிலையங்களில் காணப்படுகின்ற பல்வேறு நிருவாக பிரச்சினைகளினால் குறைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது டன் மாணவர்கள் பாடநெறிகளை விட்டுச் செல்வதற்கான காரணங்களைக் கண்டறிந்து அவற்றுக்குத் தேவையான தீர்வினை வழங்குவதற்கு முகாமைத்துவம் உடனடியாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | அதிகார சபையின் பிரதிப் பணிப்பாளர் பதவியில் ஈடுபட்ட காலத்தின் போது மற்றும் அதாவது 2006 சனவரி முதல் 2013 திசெம்பர் வரை மத்திய கலாசார நிதியத்தின் செயற்பாட்டு பணிப்பாளர் ஆக சேவையாற்றி அந்த இரண்டு | இந்த முன்னாள் பணிப்பாளர் (நிர்வாகம்) மத்திய கலாசார நிதியத்தின் சேவையில் இருந்து விடுவித்தல் சனாதிபதியின் செயலாளரின் அறிவித்தலின் அடிப்படையில் 2005.12.23 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்டிருந்தது. COPE குழுக் கூட்டத்தின் போது | விரைவாக ஆலோசனைகளை ப் பெற்று அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிறுவனங்களினதும் படிகள் மற்றும் போக்குவரத்து வசதிகள் பெற்ற உத்தியோகத்தர்கள் மத்திய கலாசார நிதியத்தில் இருந்து மாதாந்த படியாக ரூபா 5,443,723 தொகை பெற்றிருந்தமையால் அது தொடர்பாக பரிசோதனை ஒன்றை நடாத்துமாறு 2015 ஒக்டோபர் 20 ஆந் திகதிய கடிதம் மூலம் மத்திய கலாசார நிதியத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் அதிகார சபையின் தலைவருக்கு அறிவிக்கப்பட்ட போதிலும் அந்த பரிசோதனை 2023 யூலை 30 ஆந் திகதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | வழங்கப்பட்ட ஆலோசனையின் படி சனாதிபதி செயலாளரிடம் இருந்து 02 சந்தர்ப்பங்களின் போது ஆலோசனை கோரி அனுப்பப்பட்ட போதும் அமைச்சு மாற்றம் அடைந்ததன் அடிப்படையில் தேவையான ஆலோசனை கிடைக்கப்பெறவில்லை. மிகுதி நடவடிக்கைகளை எடுப்பதற்கு தேவையான ஆலோசனைகளைகோரி மீண்டும் சனாதிபதிக்கு 2023.04.19 ஆம் திகதி கடிதம் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | |
| (இ) | தொழில் பயிற்சி அதிகார சபையில் பாடநெறிகளை பின்பற்றுகின்ற மாணவர்களின் அதிகமாக பயிற்சி நடவடிக்கைகளுக்காகவும் மிகவும் சிறந்த பயிற்சி ஒன்றை வழங்கும் நோக்காக கொண்டு அகம்கம ஹோட்டல் பாடசாலை ரூபா 148.92 மில்லியன் செலவில் 2019 ஆம் ஆண்டின் போது ஹோட்டல் ஒன்றாக நவீனமயப்படுத்தப்பட்டிருந்த போதும் அந்த ஆண்டு முதல் 2023 யூன் 30 வரையும் இந்த சுற்றுலா ஹொட்டலில் இருந்து எந்தவொரு பயிலுனருக்கும் பிரயோக பயிற்சி வழங்கப்பட்டிருக்கவில்லை. | இந்த ஹோட்டல் பெறுகை முறைமையினை பயன்படுத்தி சட்டரீதியாக தனியார் அல்லது அரசாங்க துறையின் நிறுவனம் ஒன்றிற்கு நீண்ட கால ரீதியில் வாடகைக்கு வழங்குவதற்காக பெறுகை முறைமையின் மூலம் முறையீட்டாளரை தெரிவு செய்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டு அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. உரிய அங்கீகாரம் உரிமையாளரினால் எங்களின் பயிலுனர்களை மேலதிக பயிற்சிற்காக சேர்க்க வேண்டியிருந்தமை வாடகை உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். | தொழிற்பயிற்சி அதிகார சபை ஸ்தாபிக்கும் சட்டத்தில் காண்பிக்கப்பட்ட நோக்கத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | சிறுவர் அபிவிருத்தி செயற்திட்டத்தின் நோக்கத்திற்கு முரணாக கணனி பாடநெறிக்காக ரூபா 11,721,081 தொகை செலவில் 30 கணனிகள் மற்றும் கணனி துணைப்பாகங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | 2019 ஆம் ஆண்டின் போது தகவல் தொழில்நுட்ப பாடநெறி (NVQ Level IV ) 10 பாடநெறிகள் தொழிற் சந்தையில் அதிக கேள்வி காணப்படுகின்ற கணனி நிர்மாண வடிவமைப்பாளர் பாடநெறிக்கு மாற்றப்பட்டிருந்ததுடன் அதற்காக தேவையான ஆலோசனை பயிற்சிகள் மற்றும் வகுப்பறைகளை தயாரித்தல் போன்ற ஏனைய சகல தேவைகளும் நிறைவேற்றப்பட்ட போதும் திறைசேரி நிதியேற்பாடு வரையறுக்கப்பட்டமையினால் அந்த பாடநெறிக்காக | விசேட செயற்திட்டத்திற்காக நிதிக்கூற்றுக்கள் அந்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக செலவிடுவதற்கு முகாமைத்துவம் கவனம் செலுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | தேவையான கணனிகளை கொள்வனவு செய்வதற்கு 2020 ஆம் ஆண்டு வரை சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. | |
| (உ) | இலங்கை தொழில் பயிற்சி அதிகார சபையின் முழுமையான (100 சதவீதம்) பங்குரிமையுடன் 2013 திசெம்பர் 18 ஆந் திகதி அமைச்சரவை அங்கீகாரம் இன்றி அதிகார சபையின் நிதியத்திலிருந்து VTA Holdings Ltd என்ற பெயரில் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட கம்பனியை கலைப்பதற்கு தேவையான ஆவணங்கள் 2022 யூன் 20 ஆந் திகதி கம்பனி பதிவாளர் திணைக்களத்திற்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. கம்பனியின் வங்கிக் கணக்கு மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கை ஒன்றை தயாரிக்கும்மாறு அமைச்சு செயலாளர் ஒருவரினால் ஆலோசனை வழங்கப்பட்டிருந்த போதும் அந்த அறிக்கை 2023 யூலை 20 ஆந் திகதி வரை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த கம்பனி இந்த அதிகார சபையின் உத்தியோகத்தர்பதவியி மூலம் நிருவகிக்கப்படாமையினால் இந்த கம்பனி தொடர்பான ஆரம்ப நடவடிக்கையினால் பெற்றுக்கொள்வதற்கு இந்த குழு அறிக்கை அமைச்சின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக்குழு நிறுவனத்தின் கணக்காய்வு மற்றும் நிறுவனத்திற்கு எதிர்காலத்தில் சமர்ப்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | அமைச்சு மற்றும் செயலாளரின் ஆலோசனைக் கம்பனி வங்கிக் கணக்கு மற்றும் செயற்பாட்டு நடவடிக்கை தொடர்பான அறிக்கையொன்றை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | 13 வருடங்கள் தொடர்ச்சியாக கல்விசார் செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக 2019 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளின் போது கட்டளையிடப்பட்ட கூட்டு பெறுமதி ரூபா 28,078,556 ஆன 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் வழங்குனரால் அதிகார சபைக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை.<br>மேலும் 2019 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளின் போது கட்டளையிடப்பட்டு அதிகார சபைக்கு கிடைக்கப் பெற்ற உபகரணங்களில் ரூபா 4,589,944 ஆன 07 வகையான விடயங்கள் மாதிரிகளுடன் இணங்காமையால் நிராகரிக்கப்பட்டிருந்ததுடன் 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அந்த விடயங்களை மீண்டும் | இந்த பயிற்சி உபகரணங்களை வழங்குவதற்கு இறக்குமதி கட்டுப்பாடு விதித்ததன் காரணமாக முடியாதிருந்தாக உரிய வழங்குனர் விடயத்தினால் எழுத்து மூலம் அதிகாரசபைக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் சில வழங்குனரால் வழங்கப்பட்ட உபகரணங்கள் இறுதி தொழில்நுட்ப மதிப்பீட்டுடன் மாதிரிகளுக்கு இணங்காமையின் காரணமாக அந்த விடயங்கள் கையேற்கப்படாதிருந்ததுடன் அந்த வழங்குனர்களுக்கு சரியான மாதிரியில் பொருட்களை வழங்குதவற்கு நாட்டில் காணப்பட்ட டொலர் நெருக்கடியின் அடிப்படையில் இந்த உபகரணங்களை இறக்குமதி வரையறுக்கப்பட்டமையினால் | முகாமைத்துவம் விசேட கவனம் செலுத்தி 13 வருடங்கள் தொடர்ச்சியாக கல்விசார் செயற்திட்டத்திற்காக தேவையான உபகரணங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வழங்கப்பட்டிருக்கவில்லை. | வழங்க முடியாதிருந்ததாக அறிவிக்கப்பட்டிருந்தது. | |

## 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அம்பாந்தோட்டை மிரிஜ்ஜவில தேசிய தொழிற் பயிற்சி நிலையத்தில் 2017 ஆம் ஆண்டில் நிர்மாணங்கள் ஆரம்பிக்கப்பட்ட வேலைத்தள கட்டிடத்திற்காக செலவிடப்பட்ட ரூபா 19,053,095 தொகை 2017 ஆம் ஆண்டு முதல் நடைமுறை வேலை கணக்கில் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் ஒப்பந்தகாரரால் நிர்மாணங்கள் இடை நடுவில் நிறுத்தப்பட்டதன் காரணமாக கட்டிடத்தின் நிர்மாணிக்கப்பட்ட பகுதி துரிப்பிடித்த நிலையில் காணப்பட்டது. | ஓப்பந்தகாரரின் நலிவான செயலாற்றலின் காரணமாக நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்படாதிருந்தமையால் 2015.01.05 ஆம் திகதி செயற்திட்டம் கைவிடப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் மிகுதி நிர்மாணங்களை பூர்த்தி செய்வதற்காக பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதும் முன்னைய செயற்திட்டம் முறையான பூர்த்தி செய்யப்படாமையினால் (பெறுகை குழு தீர்மானம் கிடைக்காமையின் காரணமாக) மீண்டும் நிர்மாண நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இதுவரை முடியாதிருந்தது. | இடை நடுவில் நிறுத்தப்பட்ட நிர்மாண நடவடிக்கைகளை விரைவாக பூர்த்தி செய்து பயன்பாட்டிற்கு எடுக்க கூடிய நிலைமைக்கு கொண்டு வருவதற்கு செயற்பட வேண்டியிருந்ததுடன் ஒப்பந்தகாரருக்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு நடவடிக்கைகளும் எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | ஒறுகொடவத்த இலங்கை தேசிய தொழிற்பயிற்சி நிறுவனத்திற்காக 2020 ஆம் ஆண்டின் போது கொரியா அரசாங்கத்தின் நிதியுதவியின் 100 மாணவர்களுக்கு அண்ணளவான எண்ணிக்கைக்காக தங்குமிட வசதிகளை வழங்க வேண்டிய 48 அறைகளை உடைய சகல வசதிகளுடனும் மாணவர் விடுதி ஒன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது. எனினும் கணக்காய்வு திகதியான 2023 யூன் 30 வரையிலும் முழுநேர பாடநெறி பின்பற்றுகின்ற மாணவர்களுக்காக விடுதி வசதிகளை வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் 14 விரிவுரையாளர்களுக்காக விடுதி வசதிகள் வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறே 2022/2023 ஆம் ஆண்டில் படநெறிகளுடன் தொடர்புடைய 400 மாணவர்களில் | தற்போது நிறுவனத்தின் விரிவுரையாளர்களுக்காக மாதாந்த படியொன்றை அறவிட்டு விடுதி வசதிகள் வழங்கப்பட்டுள்ளது. | மாணவர்களுக்கு சலுகையினை வழங்குதல் மற்றும் தொழிற் கல்விக்காக மாணவர்களை ஈடுபடுவதை அதிகரிக்கும் முறையில் விடுதி வசதிகளை மாணவர்களுக்கு வழங்குவதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

110 மாணவர்களுக்கு அண்ணளவான எண்ணிக்கையில் பயிற்சி நிறுவனம் அமைந்துள்ள மேல் மாகாணத்திற்கு வெளியே நிரந்தர வதிவிடமுள்ள மாணவர்களாக இருந்ததுடன் அவ்வாறான மாணவர்களுக்கு சலுகையொன்றை வழங்குவதன் மூலம் தொழிற்கல்விக்காக மாணவர்களை ஈடுபடுத்துதலை அதிகரிக்க கூடிய அளவில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. வெளிநாட்டு உதவி(கடன்) பயன்படுத்தி நிர்மாணிக்கப்பட்ட இந்தக் கட்டிடம் 03 வருடங்கள் முதல் உரிய நோக்கங்களுக்காக ஈடுபடுத்தப்படாமல் குறைவாக பயன்படுத்தப்பட்டிருந்தது.

## 3.4 விளைவற்ற அல்லது குறைவாக பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அம்பாறை மாவட்டத்தில் பொத்துவில் மற்றும் யாழ்ப்பாண மாவட்டத்தில் காரைநகர் ஹோட்டல் பாடசாலை வளவில் அதிகார சபையின் நோக்கத்திற்கு புறம்பாக சுற்றுலாப்பிரயாணிகளுக்காக வழங்கும் நோக்கத்துடன் ரூபா 91,026,186 செலவில் நிர்மாணிக்கப்பட்ட 22 அறைகள் 2023 யூலை 30 ஆந் திகதி வரிலும் குறைவாக பயன்படுத்தப்பட்டிருந்தது. | பொத்துவில் மற்றும் காரைநகர் ஹோட்டல் பாடசாலைகளையும் முறையாக வாடகைக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | தொழிற் பயிற்சி அதிகார சபை ஸ்தாபிக்கப்பட்டதன் சட்டத்தில் காண்பிக்கப்பட்டதன் நோக்கங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.5 பெறுகைகள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.3.10(ஆ) வழிகாட்டியின் பிரகாரம் 2023 ஆம் ஆண்டிற்காக சுகாதார சேவைகளை பெற்றுக்கொள்ளும் பெறுகை நடவடிக்கைகளின் போது ஆகக் குறைந்த கேள்வி செல்லுபடிக்காலத்தில் ஒப்பந்தம் கையளிப்பதற்கு பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர் நடவடிக்கை எடுக்காமையால் இரண்டாவது கேள்விதாரருக்கு ஒப்பந்தத்தை கையளித்ததன் காரணமாக ரூபா 2,038,700 மேலதிக விலையில் சுகாதார சேவைகளை பெற்றுக்கொள்ள வேண்டி ஏற்பட்டிருந்தது. | இந்த நிலைமை ஏற்படுத்துவதற்கு புதிய தலைவரின் வருகை, அமைச்சின் மூலம் அந்த தலைவரை பெறுகைக் குழுவிற்கு நியமித்தல் மற்றும் இந்த கோவைகளை ஆய்வு செய்வதற்காக கவனத்தில் கொள்ளகூடிய காலம் ஒன்று எடுத்தமை என்பன காரணமாக இருந்தது. | அதிகார சபைக்கு நட்டம் ஒன்றை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமல் பெறுகை கால அட்டவணையின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதை கண்காணித்தல் வேண்டும். |